## January 19, 2026 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. அஸ்ஸாமில் ரூ.6,957 கோடி மதிப்பீட்டிலான காஸிரங்கா மேல்நிலை வழித்தட திட்டத்துக்கு பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார்.

(i) ஒற்றைக்கொம்பு காண்டாமிருகங்களின் வாழ்விடமான காஸிரங்கா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தில் வனவிலங்குகளின் பாதுகாப்பான நடமாட்டத்தை உறுதி செய்யும் நோக்கிலான இத்திட்டம், தேசிய நெடுஞ்சாலை 715-இல் விபத்துகளைக் குறைக்க உதவும். அத்துடன், சூழலியல் சுற்றுலாவை ஊக்குவித்து, உள்ளூர் மக்களுக்கு வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இது சுமார் 34 கி.மீ. தொலைவுக்கு வனவிலங்குகளின் நடமாட்டத்துக்கு உகந்த மேல்நிலை வழித்தடங்களை உள்ளடக்கியதாகும். இத்திட்டத்தின் மாதிரி வடிவமைப்பை பிரதமர் பார்வையிட்டார்.

(ii) அஸ்ஸாமின் திப்ருகர், காமாக்யாவில் இருந்து முறையே லக்னௌ (உ.பி.), ரோதக் (ஹரியாணா) ஆகிய நகரங்களுக்கு இரு அம்ருத் பாரத் ரயில் சேவைகளையும் அவர் தொடங்கிவைத்தார்.

2. கிரீன்லாந்தை அமெரிக்கா கைப்பற்ற எதிர்ப்பு தெரிவிக்கும் 8 ஐரோப்பிய நாடுகள் மீது 25 சதவீத வரி விதிக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

(i) ஆர்க்டிக் மற்றும் வட அட்லாண்டிக் பெருங்கடல்களுக்கு இடையே உலகின் மிகப் பெரிய தீவான கிரீன் லாந்து உள்ளது. டென்மார்க் நாட்டுக்குச் சொந்தமான அந்தத்தீவு பகுதியளவு சுயாட்சி பிரதேசமாக செயல்பட்டு வருகிறது.

(ii) 8-ஆவது இடத்தில்கிரீன்லாந்து:

அமெரிக்க புவியியல் ஆய்வு முகமையின் தகவல்படி, கிரீன்லாந்தில் எண்ணெய், எரிவாயு, நிக்கல், கோபால்ட் உலோகங்களுடன் அரிய புவி கனிமங்களும் உள்ளன. அந்தக் கனிமங்கள் உலகில் அதிக அளவு உள்ள நாடுகளில் கிரீன்லாந்து 8-ஆவது இடத்தில் உள்ளது.

(iii) சூப்பர்கண்டக்டர் சிப்கள், மின்சார வாகனங்கள், பசுமை எரிசக்தி ராணுவத் தொழில்நுட்பங்கள், தொழில்நுட்பங்களைத் தயாரிக்க அரிய புவி கனிமங்கள் மிகவும் அவசியமாகும். தற்போது உலக அளவில் அந்தக் கனிமங்களில் பெருமளவு சீனாவின் கட்டுப்பாட்டில் உள்ள நிலையில், அந்தக் கனிமங்களைப் பெறுவதற்கான மாற்று வழிகளை அமெரிக்கா தேடி வருகிறது.

(iv) நேட்டோ படைகள் அனுப்பிவைப்பு:

கிரீன்லாந்தை வலுக்கட்டாயமாக அமெரிக்காவுடன் இணைத்துக்கொள்ளும் டிரம்ப்பின் அச்சுறுத்தல் அதிகரித்துள்ள சூழலில், நேட்டோ ராணுவக் கூட்டமைப்பில் உள்ள டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன், நெதர்லாந்து, ஃபின்லாந்து ஆகிய 8 ஐரோப்பிய நாடுகள் தமது படைகளை கிரீன்லாந்துக்கு அனுப்பியுள்ளன.

(v) இது உலகின் பாதுகாப்புக்கு மிகவும் ஆபத்தான சூழலை ஏற்படுத்தியுள்ளதாக

அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்தார்.

(vi) ஜூன் 1 முதல் 25 சத வீத வரி: இந்நிலையில், அந்த 8 நாடுகள் கிரீன் லாந்தை அமெரிக்கா கைப்பற்ற எதிர்ப்பு தெரிவிப்பதால், அவற்றின் மீது 10 சதவீதம் வரி விதிப்பதாக அதிபர் டிரம்ப் அறிவித்தார். இது தொடர்பாக அவர் சமூக ஊடகத்தில் வெளியிட்ட பதிவில், 'டென்மார்க், நார்வே, ஸ்வீடன், பிரான்ஸ், ஜெர்மனி, பிரிட்டன், நெதர்லாந்து, ஃபின்லாந்தில் இருந்து அமெரிக்காவில் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் மீது வரும் பிப்ரவரி முதல் 10 சதவீத வரி விதிக்கப்படும்; இந்த வரி விதிப்பு ஜூன் 1 முதல் 25 சதவீதமாக அதிகரிக்கப்பட்டு, கிரீன்லாந்தை அமெரிக்கா முழுமையாக வாங்குவதற்கு ஒப்பந்தம் எட்டப்படும் வரை அமலில் இருக்கும்' என்று எச்சரிக்கை விடுத்தார்.

(vii) 8 நாடுகள் கூட்டறிக்கை: 8 நாடுகள் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில், 'டென்மார்க் மற்றும் கிரீன்லாந்து மக்களுக்கு 8 நாடுகளும் உறுதுணையாக நிற்கின்றன. பிராந்திய ஒருமைப்பாடு, இறையாண்மை ஆகிய கொள்கைகள் மீது 8 நாடுகளும் உறுதியாகப் பற்றுகொண்டுள்ளன. அந்தக் கொள்கைகளின் அடிப்படையில், கிரீன்லாந்து விவகாரத்தில் பேச்சுவார்த்தை நடத்த தயாராக உள்ளோம். வரி விதிப்பு மூலம் விடுக்கப்படும் மிரட்டல்கள் அட்லாண்டிக் பெருங்கடலுக்கு அப்பால் உள்ள நாடுகளுடனான உறவை வலுவிழக்கச் செய்து ஆபத்தான முறையில் சூழலை மோசமாக்கும். இந்த விவகாரத்தில் 8 நாடுகளும் ஒற்றுமையுடன் இருந்து ஒருங்கிணைந்து எதிர்வினையாற்றும்' என்று தெரிவித்துள்ளன.

(viii) ஒப்பந்தம் நிறுத்திவைப்பு: இந்த வரி விதிப்பு காரணமாக கடந்த ஆண்டு ஜூலையில் அமெரிக்கா-ஐரோப்பிய யூனியன் இடையே மேற்கொள்ளப்பட்ட வர்த்தக ஒப்பந்தத்துக்கு முறைப்படி ஒப்புதல் அளிப்பதை ஐரோப்பிய யூனியன் நிறுத்தியுள்ளது.

3. ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டில் காலிங்கராயர் முழு உருவ வெண்கலச் சிலை திறந்துவைக்கப்பட்டது.

(i) சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ் டாலின் காணொலிக் காட்சி மூலமாக திறந்துவைத்தார். அப்போது, ஈரோடு மாவட்டம், வெள்ளோட்டில் நடைபெற்ற விழாவில் விவசாயிகள் திரளாகப் பங்கேற்றனர்.

(ii) நதிநீர் இணைப்பின் முன்னோடி எனப் போற்றப்படும் காலிங்கராயர், 1270-ஆம் ஆண்டில் தனது சொந்த செலவில் ஈரோடு மாவட்டத்தில் காலிங்கராயன் கால்வாயை வெட்டத் தொடங்கினார்.

(iii) சுமார் 12 ஆண்டுகள் கழித்து கால்வாய் வெட்டும் பணி நிறைவடைந்தது. ஈரோடு மாவட்டம், பவானியில் காலிங்கராயன்பாளையத்தில் தொடங்கிய பணி, ஈரோடு வழியாக கொடுமுடி நொய்யல் ஆற்றில் முடிவடைந்தது.

(iv) மொத்தம் 90 கிலோ மீட்டர் தொலைவில் காலிங்கராயன் கால்வாய் வெட்டி முடிக்கப்பட்டது. காலிங்கராயன் கால்வாய் மூலமாக ஈரோடு மாவட்டத்தில் 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்று வருகின்றன.

(v) இந்த நிலையில், ஈரோடு மாவட்டம், சென்னிமலை ஒன்றியம் வெள்ளோடு

ராசாகோவில் அருகே காலிங்கராயனுக்கு 7 அடி உயரத்தில் முழு உருவ வெண்கலச் சிலை நிறுவப்பட்டது.

(vi) காலிங்கராயன் வாய்க்கால் புனரமைப்புப் பணிக்கு ரூ.86 கோடியில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மார்ச் மாதம் தண்ணீர் நிறுத்தப்படும்போது புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

4. இந்தியாவின் 77-ஆவது குடியரசு தினத்தை முன்னிட்டு, ஜனவரி 26-ஆம் தேதி குடியரசுத் தலைவர் திரௌ பதிமுர்மு தனது மாளிகையில் விருந்தினர்களுக்கு வழங்கும் தேநீர் விருந்து நிகழ்வுக்கான அழைப்பிதழ் தொகுப்பு, வடகிழக்கு மாநிலங்களின் பாரம்பரிய கலை மற்றும் கைவினைத்திறனை பிரதிபலிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

(i) குஜராத் மாநிலம் அகமதாபாதில் உள்ள தேசிய வடிவமைப்பு நிறுவனம் (என்ஐடி) இந்த அழைப்பிதழை வடிவமைத்துள்ளது. 'அஷ்டலட்சுமி மாநிலங்கள் என்றறியப்படும் வடகிழக்கில் உள்ள எட்டு மாநிலங்களின் கைவினைப் பொருள்கள், கலாசாரம் மற்றும் அவற்றின் உயிர்ப்பு மிக்க மரபுகளை ஒன்றிணைத்து இந்த அழைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

(ii) இந்த அழைப்பிதழ் தயாரிப்புத் திட்டத்தின் முக்கியத்துவத்தை விளக்கிய அகமதாபாத் என்ஐடி இயக்குநர் அசோக் மொண்டல், தொடர்ந்து மூன்றாவது முறையாக இந்தத் பணியை குடியரசுத் தலைவர் மாளிகை தங்களிடம் ஒப்படைத்துள்ளதாகத் தெரிவித்தார்.

(iii) 350 பேர் கூட்டு முயற்சி: அவர் மேலும் கூறுகையில், 'அருணாசல பிரதேசம், அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயம், மிஸோரம், நாகாலாந்து, சிக்கிம், திரிபுரா ஆகிய எட்டு வடகிழக்கு மாநிலங்களின் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் மற்றும் கலாசார அடையாளங்களை ஒருங்கிணைக்கும் வகையில் இதில் உள்ள படைப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

(iv) இந்த அழைப்பிதழ் தொகுப்பு தயாரிப்பில் குடியரசுத் தலைவர் மாளிகை, எட்டு மாநிலங்களின் கைவினைக் கலைஞர்கள் மற்றும் நிபுணர்கள் உதவியுடன் சுமார் 350-க்கும் மேற்பட்டோர் கூட்டு முயற்சியின் வெளிப்பாடாகும். அழைப்பிதழில் பயன்படுத்திய மூலப்பொருள்கள், பருவ காலத்துக்கு ஏற்ப அவை கிடைக்கும் தன்மையைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு மாநிலத்தின் தனித்துவமான கைவினை மரபுகளின் பெருமை குறையாதவாறு மிகுந்த கவனம் செலுத்தி வடிவமைக்கப்பட்டது என்றார். இந்த தயாரிப்புத் திட்டத்திற்கு அகமதாபாத் என்ஐடி பேராசிரியர்கள் ஆண்ட்ரியா நோரோன்ஹா, டாக்டர் சி.எஸ். சுசாந்த் ஆகியோர் தலைமை தாங்கினார். இந்தத் தொகுப்பின் மையமாக அழைப்பிதழ் பேழை உள்ளது. இது திரிபுராவின் பாரம்பரிய நுட்பங்களைப் பயன்படுத்தி தறியில் நெய்யப்பட்ட மூங்கில் பாய்களிலிருந்து உருவாக்கப்பட்டுள்ளது.

(v) வடகிழக்கு இந்தியாவின் பொருளாதாரம் மற்றும் கலாசார வாழ்வின் முதுகெலும்பாக மூங்கில் உள்ளது. சாயமிடப்பட்ட பருத்தி நூல்கள் மற்றும் மெல்லிய மூங்கில் பட்டைகள் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளன. வெளிப்புற உறைகையால் தயாரிக்கப்பட்ட காகிதம் மற்றும் புகையூட்டப்பட்ட மூங்கில்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. மேகாலய பங்களிப்பு இந்த உறை. அழைப்பிதழ் பேழையில் உள்ள காட்சி வடிவங்கள், அஸ்ஸாமிய பாரம்பரிய ஓவியங்கள்,

அப்பகுதியின் வளமான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களில் இருந்து உத்வேகம் பெறுவதைக் குறிக்கின்றன.

(vi) மூங்கில், கைத்தறித் துணி, நார், பிரம்பு, களிமண் போன்ற இயற்கை பொருள்கள் இந்தத் தொகுப்பில் ஆதிக்கம் செலுத்துகின்றன. இது வடகிழக்கு இந்தியாவின் அன்றாட வாழ்க்கை, வாழ்வாதாரங்கள் மற்றும் கலாசார மரபுகளுடன் அவற்றுக்குள்ள ஆழமான தொடர்பை உணர்த்துகின்றன.

(vii) இப்பகுதி முழுவதும் உள்ள பெண்களுக்கு வேலைவாய்ப்பின் முக்கிய ஆதாரமாக விளங்கும் கைத்தறிப் பொருள்களுக்கு சிறப்பு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

(viii) அழைப்பிதழுக்குள்...: சுவரில் தொங்கவிடும்படியான மூங்கில் நெசவு வடிவஅழைப்பிதழ் எட்டு வடகிழக்கு மாநிலங்களிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட அடையாளங்ககளைக் காட்சிப்படுத்துகிறது.

(ix) யுனெஸ்கோ 'கலப்பு பாரம்பரியத் தளம்' என அறிவித்துள்ள கஞ்சன்ஜங்கா மலைத்தொடருடனான தொன்மையான தொடர்பை அடையாளப்படுத்துகிறது. லெப்சா 'தாரா' நெசவு பாரம்பரியத்தில் உருவாக்கப்பட்ட சிக்கிமின் சிஸ்னு நெசவு மற்றும் எம்பிராய்டரியும் இதில் அடங்கும்.

(x) இத்துடன் உலகின் அதிக மழைப்பொழிவு பெறும் பகுதிகளில் ஒன்றான மேகாலயத்தின் கிழக்கு காசி மலைகள் மற்றும் மவ்சின்ராமில் இருந்து பெறப்பட்ட பச்சை மூங்கில் நெசவு, அஸ்ஸாமின் கோகோனா மூங்கில் தாடையாழ், திரிபுராவின் பிரம்பு மற்றும் மூங்கில் பட்டை அலங்காரப் பொருள்கள், நாகாலாந்தின் அரிய ஜவுளி வகைகள், மிஸோரம் மாநிலத்தின் சின்னமான கையால் நெய்யப்பட்ட புவான் செய் துணி மற்றும் புதிய கற்காலத்திற்கு முந்தைய காலத்திலிருந்தே வேரூன்றிய கைவினைப் பாரம்பரியமான தாங்குல் நாகா சமூகத்தின் மணிப்பூரி லாங்பி கருப்பு மண்பாண்ட வடிவங்கள் இடம்பெற்றுள்ளன.

(xi) குடியரசுத் தலைவராக திரௌபதி முர்முபதவியேற்றபிறகு ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு மாநிலங்களின் பாரம்பரிய கைவினைத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் குடியரசு தின தேநீர் விருந்து அழைப்பிதழ் வடிவமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(xii) சிறப்பம்சமாக இந்தியாவின் ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் கைவினைஞர்கள், அதிகம் வெளியே அறியப்படாத சாதனை படைத்தவர்கள், தீரச்செயல் விருது பெற்றவர்கள் புது தில்லிக்கு வர வழைக்கப்பட்டு குடியரசுத் தலைவரின் விருந்தினராக வரவேற்கப்பட்டு உபசரிக்கப்படும் நடைமுறையும் கடைப்பிடிக்கப்படுகிறது.

5. மத்திய பிரதேச மாநிலம் நீமுச் மாவட்டம் மானசா நகரில் பரவி வரும் 'குல்லெய்ன்-பார் சிண்ட்ரோம் (ஜிபிஎஸ்) என்ற நோய் எதிர்ப்பு நரம்பு பாதிப்பு பரவல் அந்த மாநிலத்தில் புதிய பிரச்னையாக உருவெடுத்துள்ளது.

(i) அந்தப் பகுதியில் 12-க்கும் மேற்பட்டோர் பாதிக்கப்பட்ட நிலையில், இருவர் உயிரிழந்தனர். அதைத் தொடர்ந்து, இந்த நோய் பாதிப்புக்கு உள்ளானவர்களை அடையாளம் கண்டு சிகிச்சை அளிப்பதற்கான நடவடிக்கைகளை மாநில அரசு

தீவிரப்படுத்தியுள்ளது.

(ii) கழிவுநீர் கலந்த குடிநீரைப் பருகுவது, முழுமையாக வேக வைக்கப்படாத கோழி இறைச்சியை உண்பது, பதப்படுத்தப்படாத பால் பொருள்களை உண்பது போன்ற காரணங்களில் இந்த பாதிப்பு ஏற்படவாய்ப்புள்ளதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

(iii) இந்த ஜிபிஎஸ் நோய் பாதிப்புக்கு உள்ளானவர்களின், நோய் எதிர்ப்பு அமைப்பு புற நரம்பு மண்டலத்தைத் தாக்கத் தொடங்கும். இதனால், உடலின் சில பாகங்கள் திடீரென உணர்ச்சியற்றுப் போகும்.

(iv) தசை பலவீனம் ஏற்படுவதோடு, விழுங்குவதற்கும், சுவாசிப்பதற்கும் சிரமம் ஏற்படலாம் என்றும் மருத்துவர்கள் தெரிவித் தனர்.

(v) இந்தூரின் பகீரத்புரா பகுதியில் அண்மையில், குடிநீரில் கழிவுநீர் கலந்ததில், அதைக்குடித்த 21 பேர் உயிரிழந்த பரபரப்பு அடங்குவதற்குள்,' ஜிபிஎஸ்' சிண்ட்ரோம் என்ற மற்றொரு பாதிப்பு ஏற்பட்டு பரப்ரப்பை ஏற்படுத்தியுள்ளது.

6. ஏற்றுமதியை ஊக்குவிப்பதற்கு, வெளிநாடுகளில் உள்ள இந்திய வர்த்தக அலுவலகங்கள் கடைப்பிடிக்க வேண்டிய வழி காட்டுதல்களை மத்திய அரசு வகுத்துள்ளது.

(i) இது குறித்து மத்திய வர்த்தக அமைச்சக மூத்த அதிகாரி ஒருவர் கூறிய தாவது:2030-ஆம் ஆண்டுக்குள் பொருள்கள் ஏற்றுமதி மற்றும் சேவைகள் மூலம் கிடைக்கும் வருவாயை 2 டிரில்லியன் அமெரிக்க டாலராக அதிகரிக்க இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது. தற்போது சர்வதேச அளவில் பொருளாதார நிச்சயமற்றதன்மை நிலவுகிறது.

(ii) இந்தச் சூழ்நிலையில், சந்தை பன்முகத்தன்மைமூலம் இந்திய ஏற்று மதியை அதிகரிப்பதற்கு, வெளிநாடுகளில் உள்ள இந்திய வர்த்தக அலுவலகங்களுக்கான வழிகாட்டுதல்கள் மத்திய வர்த்தக அமைச்சகத்தால் வகுக்கப்பட்டுள்ளன.

(iii) அதில், வரிகள் அல்லாத வர்த்தகங்கள், சந்தை ஈடுபாட்டு நடவடிக்கைகள், திட்டமிடல், வளங்கள் நிர்வகிப்பு, வர்த்தக நுண்ணறிவு, சந்தை ஆராய்ச்சி உள்ளிட்டவை இடம்பெற்றுள்ளன. இதேபோல், இந்தியப் பொருள்களுக்கு வெளிநாட்டுச் சந்தைகளில் இருக்கும் தேவைகள் குறித்து ஆய்வு மேற்கொள்ளும்படியும் வர்த்தகப் பிரதிநிதிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர் என்றார்.

7. மேற்கு வங்கத்தில் நிபா தொற்று பரவி வரும் நிலையில், பறவைகள், விலங்குகள் கடித்த பழங்களை உண்ணக் கூடாது என்றும், பதநீர் அருந்துவதைத் தவிர்க்குமாறும் தமிழக பொது சுகாதாரத் துறை அறிவுறுத்தியுள்ளது.

(i) மேற்கு வங்க மாநிலம், நாடியா மாவட்டத்தில் நிபா பரவல் கண்டறியப்பட்டுள்ளது. இரு செவிலியர்கள் அத்தொற்றுக்குள்ளாகி தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். இதையடுத்து நாடு முழுவதும் கண்காணிப்பு மற்றும் முன்னெச் சரிக்கை நடவடிக்கையை தீவிரப் படுத்துமாறு அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய சுகாதாரத்துறை அறிவுறுத்தியுள்ளது.

(ii) தமிழகத்தில் இதுவரை அதன் காக்கம் இல்லை என்றாலும் பொதுமக்கள் விழிப்புணர்வுடன் இருந்து நோய்த் தடுப்பு வழிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

(iii) இது தொடர்பாக பொது சுகாதாரத் துறை இயக்குநர் டாக்டர் சோமசுந்தரம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நிபா வைரஸ் என்பது விலங்குகள் மூலம் பரவும் ஒரு நோய் தொற்று. பழங்களை உண்ணும் வௌவால்கள், குதிரைகள், நாய்கள் மற்றும் பன்றிகள் மூலம் மனிதர்களுக்கு இது பரவுகிறது. வௌவாலின் உமிழ்நீர் படர்ந்த பழங்களை உண்ணுவதன் மூலமாகவோ அல்லது பாதிக்கப்பட்ட நபருடன் நெருங்கிய தொடர்பு கொள்வதன் மூலமாகவோ நோய் தொற்று பரவுகிறது. காய்ச்சல், தலைவலி, வாந்தி, குழப்பம், தூக்கமின்மை, மூச்சுதிணறல் அல்லது மயக்கம், வலிப்பு போன்றவை முக்கிய அறிகுறிகள் பாதிப்பு ஏற்பட்ட 6 முதல் 21 நாள்களுக்குள் அறிகுறிகள் தென்படும்.